கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கம்
Coventry Tamil Welfare Association

http:// HYPERLINK http://www.tamils.org.uk
www.tamils.org.uk
Email: coventrytamils2002@gmail.com
Mobile no:- 07823535094
தலைவர்:- சிவத்தமிழ் காவலன் க.அரியரத்தினம்.

ஆனி மாத இதழ்
NEWS BULLETIN
JUNE 2026
ஆக்கம்:- ஸ்ரீ.பகீரதன்

நாள்	நிகழ்வு
11/04 – 28/06	கொவன்றி தமிழ்மொழிக் கலைக் கழகம் சனி மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில் MEADOW PARK SCHOOL ABBEY RD, COVENTRY CV3 4BD எனும் முகவரியில் நடைபெறுகின்றது
13/06	தமிழ்த்திறன் பரிசளிப்பு விழா
13&20 /06/26	பிரித்தானிய தமிழ்ப் பரீட்சைச் சபையின் பேச்சுப் பரீட்சை
27/06	பிரித்தானிய தமிழ்ப் பரீட்சைச் சபையின் ஆண்டுப் பரீட்சை
04/07	வருடாந்த இல்ல விளையாட்டு விழா

SATURDAYS	Time
Tamil	9.50am-12.30pm
Free Karate (Mr. Prathith.P teacher)	12.30pm – 2.30pm
Vocal (Mr. Dheenadayalan.P teacher)	12.30pm – 2.30pm
Keyboard (Miss. Tiffany.L teacher)	12.30pm – 4.00pm
Bharathanatiyam (Mrs. Ajantha.K teacher)	1.00pm – 5.00pm
Free Yoga Class (அருள்நிதி. Gowrisankar.D teacher)	12.30pm – 2.30pm
Free 11plus Verbal & Nonverbal Reasoning (Mrs. Gayathri Krish teacher)	2.00pm – 4.00pm
SUNDAYS	**Time**
Tamil	10.00am – 12.00pm
Bharathanatiyam (Mrs. Sathyagowri.J teacher)	10.00am – 3.00pm
Vocal (Mrs. Vanathy.S teacher)	9.00am – 1.00pm
Violin&Veena (Miss. Varani.S teacher)	9.00am – 2.00pm
Keyboard (Miss. Tiffany.L teacher)	11.30am – 2.30pm
Miruthangam (Mr.Wijayarajah.M teacher)	12.00am – 1.00pm
Free Miruthangam Online (Mr. Thillaiampalam Narendra teacher)	1.00pm – 3.00pm
Free 11plus Maths (Mr.Krish teacher)	9.00am – 11.00am



தமிழ்த்திறன் பரிசளிப்பு விழா

இவ்விழாவானது 13/06/2026 அன்று மாலை 5 மணிக்கு Meadow Park பாடசாலை அரங்கத்தில் மிகவும் சிறப்பான முறையில் நடைபெற்றது. பிரதம விருந்தினராக கலாநிதி ஜான்சிராணி ரெங்கநாதன் MSc, MPhil, PhD in Home science Extension EducationAssistant professor(SG) Department of Home science Extension Education Avinasilingam Deemed University, Coimbatore Tamilnadu அவர்களும், சிறப்பு விருந்தினர்களாக யோக்செயார் தமிழ்ப் பொதுப் பாடசாலையின் தலைமை ஆசிரியை திருமதி அருணா பரமசுந்தரம், தமிழாசிரியர்கள் திருமதி கிமாலா சுரேஷ், திருமதி சிவஜா பிரபாகரன், திருமதி சுமிதா தர்மேந்திரன், திருமதி ராஜினி பெர்னாண்டோ மற்றும் கொவன்றியிலிருந்து பொறியியலாளர் திருமதி சோபிகா ரஜீவன் ஆகியோரும் கலந்து கொண்டு நிகழ்வைச் சிறப்பித்திருந்தார்கள்.







விருந்தினர்கள் அனைவரும் கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கத்தினால் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டனர்.

ஆரம்ப நிகழ்வான மங்கல விளக்கினை பிரதம விருந்தினர் கலாநிதி ஜான்சிராணி ரெங்கநாதன் அவர்கள், கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கத்தின் தலைவர் திரு கந்தையா

அரியரத்தினம் அவர்கள், அவரது துணைவியார் திருமதி சிமிதா அரியரத்தினம் அவர்கள்,



சிரேஷ்ட உபதலைவரும் தமிழாசிரியையுமான திருமதி ஜெயஸ்ரீ சதானந்தன், தலைமை ஆசிரியை திருமதி



ரஜனி உதயசேகரன், உப செயலாளரும், தமிழாசிரியையுமான திருமதி ரஜனி யேசுராசா, சிரேஷ்ட ஆசிரியர்கள் திருமதி ஜெயதேவி சிவநேசன், திருமதி புஷ்பா தவத்துரை, திருமதி



அனற்செபமலர் கிருஷ்ணதாஸ் ஆகியோர் ஏற்றி வைத்தனர்.



வரவேற்புரையையும், தலைமையுரையையும் கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கத்தின் தலைவர் மதிப்புக்குரிய திரு கந்தையா அரியரத்தினம் அவர்கள் நிகழ்த்தியிருந்தார்.

பிரதம விருந்தினர் உரையை கலாநிதி ஜான்சிராணி ரெங்கநாதன் அவர்கள் நிகழ்த்தியிருந்தார்.






பரிசளிப்பு நிகழ்வுகளின் இடையே மாணவர்களின் கலைநிகழ்வுகளும் இடம்பெற்றன.

























அனைத்து நிகழ்வுகளுமே அற்புதமாக இருந்ததோடு, சபையோரையும் மகழ்ச்சிக் கடலில் மிதக்க வைத்தன. கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கத்தின் உப செயலாளரும், தமிழாசிரியையுமான திருமதி ரஜனி யேசுராசா அவர்களின் நன்றியுரையோடு பரிசளிப்பு விழா இனிதே நிறைவுற்றது. நிகழ்வைக் கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கத்தின் செயலாளர் திரு ஸ்ரீநாதன் பகீரதன், சிரேஷ்ட உபதலைவரும், தமிழாசிரியையுமான திருமதி ஜெயஸ்ரீ சதானந்தன் ஆகியோர் தொகுத்து வழங்கியிருந்தனர்.





பெற்றோரான திரு முத்துவேலு ஜெயசங்கர், சங்கீத ஆசிரியர் திரு பத்மநாதன் தீனதயாளன், மாணவன் செல்வன் அனுஜன் ஜெயசங்கர் ஆகியோர் சிறப்பான ஒலி அனுசரணையையும், கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கத்தின் நிர்வாக உறுப்பினர் திரு நாகலிங்கம் சுகந்தன் அவர்கள் புகைப்பட அனுசரணையையும் வழங்கி நிகழ்வை மேலும் மெருகூட்டியிருந்தனர்.





அத்துடன் தாயக சுவைமிகு உணவுகளை அருவி உணவகத்தினர் விற்பனை செய்தனர்.



பிரித்தானிய தமிழ்ப் பரீட்சைச் சபையின் ஆண்டுப் பரீட்சை


பிரித்தானிய தமிழ்ப் பரீட்சைச் சபையின் ஆண்டுப் பரீட்சை 27/06/2026 அன்று பிரித்தானியாவிலுள்ள பல தமிழ்ப் பாடசாலைகள் மற்றும் பல நாடுகளில் மிகவும் சிறப்பான முறையில் நடைபெற்றது.



கொவன்றி தமிழ்மொழிக் கலைக் கழக பரீட்சை நிலையத்தில் பல நூற்றுக்கணக்கான மாணவர்கள் எமது பாடசாலையிலிருந்தும், வெளிப் பாடசாலைகளிலிருந்தும் பரீட்சைகளில் தோற்றியிருந்தார்கள்.










கொவன்றியிலிருந்து, பிரித்தானிய தமிழ்ப் பரீட்சைச் சபையின் சார்பில், யோக்செயார் தமிழ்ப் பொதுப் பாடசாலைக்கு பரீட்சகர்களாகச் சென்று அங்கும் பரீட்சைகளைச் சிறப்பாக நடாத்தியிருந்தார்கள்.



கதம்பம் பல்சுவை நிகழ்ச்சி

World peace and Harmony அமைப்பினரால் உலகெங்கிலுமுள்ள ஆர்வலர்களை இணைத்து பிரதி வியாழக்கிழமைகளில் இரவு 8 மணிக்கு Zoom இணைய வழியில் நடாத்தப்படும் கதம்பம் பல்சுவை நிகழ்ச்சியில், கொவன்றி தமிழ்மொழிக் கலைக்கழக மாணவர்களும் கலந்துகொண்டு, தங்கள் திறமைகளை வெளிப்படுத்தி வருகின்றனர். எமது பாடசாலை நிகழ்வுகளை, நிர்வாக அலுவலர் திருமதி பொன்மணி ஜெய்கணேஷ் அவர்கள் தொகுத்து வழங்கி வருகின்றார்.




. 04/06/2026 அன்று நடைபெற்ற கதம்ப நிகழ்வில், செல்வன் மிதுன்சன் ராஜன் (தரம்-01) பாரதியார் நடிப்பையும்,






செல்வி அக்சயா அசோக்குமார் (தரம்-05) “அப்பா” என்ற தலைப்பில் கவிதையையும், செல்வன் மதுசன் கயேந்திரா (தரம்-04) “அப்பா” என்ற தலைப்பில் கவிதையையும், செல்வி அனுஷாலி சுகிர்தராஜ் (பாலர்-02) தேவாரத்தையும், ஆசிரியை





ரி.ஃபனி அவர்களின் மாணவன் செல்வன் அனுஜன் ஜெயசங்கர் சுரத்தட்டு இசையையும் வழங்கியிருந்தனர்.



தாய் மண்ணில் தமிழரின் பண்பாட்டு மரங்கள்

வன்னி மரம்

எம் தாய் மண்ணை நாம் நெஞ்சுருகிக் கூறும் "வன்னி" என்ற சொல் வன்னி மரத்தில் இருந்தே வந்தது. மூவேந்தரில் ஒருவரான சோழர்களின் குலமரம் இந்த வன்னி மரம் ஆகும். சோழ மன்னன் இராஜராஜன் கட்டிய தஞ்சைப் பெரும் கோயில், ராஜேந்திர சோழன் கட்டிய கங்கை கொண்ட சோழபுரம் இரண்டிலுமே தல விருட்சமாக வன்னி மரம் காணப்படுகின்றது.



கங்கை கொண்ட சோழ புரத்தின் முன்னைய பெயர், வன்னி மரங்கள் பெருமளவில் கொண்ட "வன்னியபுரம்" என்பதாகும். சிந்துவெளி நாகரிகம் காணப்படும் ஒரு இடமான ராஜஸ்தானில், வன்னி மரங்கள் இன்றும் வணங்கப்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

சேரர்களின் வரலாறு கூறும் பதிற்றுப்பத்து இலக்கியத்தில், இறந்த மன்னர்களின் முதுமக்கள் தாழிகள் இருக்கும் இடம் வன்னி மரக்காடு என்று குறிப்பிடப்படுகின்றது.

மருத மரம்

கிளிநொச்சியின் குளக்கரைகளிலும், ஆற்றோரங்களிலும், வாய்க்கால் ஓரங்களிலும் காணப்படும் மிகப் பருத்த அழகிய மரங்கள் இவை. இதன் பெயரிலேயே ஐவகை நிலங்களில் ஒன்றான மருத நிலம் தொல்காப்பியர் காலம் தொட்டே வகுக்கப்பட்டிருக்கிறது. இது வயலும் வயல் சார்ந்த நிலம் ஆகும்.



மருதமலை போன்ற பல கோயில்களின் தல விருட்சமாக வழிபடப்படுகின்றது. பல சங்க இலக்கியங்களில் சிறப்பாகக் காண்பிக்கப்படும் இந்த மரம், செழிப்பு, காதலின் பல உணர்வுகளை இலக்கியங்களில் பிரதிபலிக்கின்றது.

பாலை மரம்

எமது மண்ணின் வறண்ட பகுதிகளிலும் உள்ளூர்களிலும் இதனை இப்போதும் காணலாம். பாலைப்பழம் என்று நினைத்தாலே நாவூறும். 2000 வருடங்களுக்கும் மேலான பழமையான இலக்கிய வரலாறுகளைக் கொண்ட இந்த மரத்தின் பெயரில், ஐவகை நிலங்களில் ஒன்றான நிலமாக பாலை நிலம் விளங்குகின்றது.

இந்த நிலம் வறண்ட நிலமான மணலும் மணல் சார்ந்த பகுதியாகும். சிவபெருமானின் தல விருட்சமாக இது வணங்கப்படுகின்றது. இதன் அனைத்துப் பகுதிகளுமே மருத்துவக் குணம் கொண்டவை.



வாகை மரம்

சங்க காலத்தில் போரில் வெற்றி பெற்ற வீரர்கள் வாகைப் பூவைச் சூடியே வெற்றியைக் கொண்டாடுவார்கள். அதனால் தான் இன்றும் "வெற்றி வாகை" என்று நாம் கூறுகின்றோம். இது பல நோய்களுக்கு மருத்துவ நிவாரணியாக விளங்குகின்றது.

வாகையில் பெருவாகை, செவ்வாகை, நிலவாகை எனப் பல வகைகள் உள்ளன.



தொல்காப்பியத்தில் வீரம் கூறும் புறத்திணையில் வாகைத் திணையும் ஒன்றாக இருக்கிறது. பல சிவன் கோயில்களில் இது தல விருட்சமாகப் போற்றி வணங்கப்படுகிறது.

இலுப்பை மரம்

சங்க இலக்கியத்தில் பல பாடல்களில் இலுப்பை மரம் பற்றிய குறிப்புகள் வருகின்றன. இது "இருப்பை" மரம் என்று அன்று அழைக்கப்பட்டது. இது மேகக் கூட்டங்களை வருவித்து மழையை வரவழைக்கும் குணம் கொண்டது. 400 வருட ஆயுட்காலம் கொண்ட மரம் இது.

வறண்ட நிலப்பகுதிகளில் மிகச் சாதாரணமாக வளரக்கூடியது. இதனின் அனைத்துப் பகுதிகளுமே சங்க காலம் தொட்டு இன்று வரை மருத்துவப் பயன்பாட்டில் உள்ளன. இதன் எண்ணெய் சாப்பாட்டுக்கு உகந்ததும், மிகவும் நல்ல மருத்துவக் குணத்தையும் கொண்டது. இதன் பூக்களைக் கொண்டு சர்க்கரை தயாரிக்கவும் முடியும். அதனால் தான் "ஆலை இல்லா ஊரில் இலுப்பைப் பூ சக்கரையாம்" என்ற பழமொழி உண்டு.



சங்க காலத்தில் இதன் பூக்களை தேனும் அரிசியும் கலந்து சமைத்திருக்கின்றனர்.

பனை மரம்

திருவள்ளுவர் முப்பாலிலும் பனை மரத்தைப் பற்றி பல குறள்களில் குறிப்பிட்டுள்ளார். தனது குறள்களையே பனை ஓலையில் எழுதியதன் நன்றிக்கடனாகக் கூட இருந்திருக்கலாம். சங்க இலக்கியத்தில் பல பாடல்களில் பனை பற்றியும் கள் பற்றியும் குறிப்புகள் உள்ளன.



சேரர்களின் காவல் மரமாக பனையும், அவர்கள் சூடும் மாலையாக பனம் பூவும் இருந்திருக்கின்றன. அன்றைய திருமணத்தில் பனை ஓலையில் தாலி செய்து அணிந்திருக்கின்றார்கள். பனை ஓலையைப் பதப்படுத்தி எழுத்தாணி கொண்டு எமக்கு வரலாற்றை நம் முன்னோர் கொடுத்திருக்கின்றார்கள். ஓலைச் சுவடிகளின் ஆயுட் காலம் 300 லிருந்து 500 வரை ஆகும். மன்னர்களின் வீரத்தை பனமரத்துக்கு ஒப்பிட்டு பாடி இருக்கின்றனர்.

இவ்வாறாக, எமது பண்டைய தமிழர்கள் போற்றிப் பயன்படுத்தி வந்த பலப் பல வரலாற்று மரங்கள் எமது மண்ணில் அருகி வருகின்றன என்பது வேதனைக்குரிய கிடையவே. இவற்றை அழிவின் விளிம்பில் இருந்து காப்பது எமது கடமையாக இருக்கின்றது.

நன்றி
திருமதி.ஜெயஸ்ரீ சதானந்தன்.
தமிழாசிரியை,
சிரேஷ்ட உபதலைவர்
கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கம்.



சர்வதேச தந்தையர் தினம்

ஒவ்வொரு ஆண்டும் ஜூன் மாதம் மூன்றாவது ஞாயிற்றுக்கிழமை உலக தந்தையர் தினம் கொண்டாடப்படுகிறது. இந்த வருடம் 21/06/26 அன்று கொண்டாடப்பட்டது.





